பக்கங்கள்:08

# காலைக்கதிர்

Kalaikkathir

விழுயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 04 திங்கட்கிழமை 17.04.2023 கதிர்158

## சிறிலங்கன் ஏயார் லைன்ஸின் ஐந்து விமானங்கள் பழுது

### திருத்த வழியின்றி ஓரமாக நிறுத்திவைப்பு

சிறிலங்கன் ஏயார் லைன் ஸுக்குச் சொந்தமான ஏயார் பஸ் ரக ஐந்து விமானங்கள் பல மாதங்களாகச் செயற்பாடாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இயந்திரம் உள்ளிட்ட பாகங்களில் தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்டுள்ள பழுதுகளைத் திருத்தியமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வாறு செயற்படுத்தப் படாதுள்ள விமானங்களில் 2017ஆம் ஆண்டு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஏ-320 நியோ, ஏ-321நியோ உள்ளிட்டவையும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கன்ஸ் எயார்லன்ஸிடம் 24விமானங்கள் சேவையில் உள்ளன. அவற்றில் மேற்படி ஐந்துவிமானங்கள் இயங்கவில்ல.

அதேநேரம், ஸ்ரீலங்கன்ஸ் எயர்லன்ஸ் ஆறுவகையான விமான்ங்களை பயன்படுத்தி வருவதனால்தான் இவ்விதமான நிலைமை தோற்றம் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள அதிகாரியொருவர், எமிரேட்ஸ் போன்ற பெரும்விமானசேவைநிறுவனங்கள் இரண்டு வகையான விமானங்களையே சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

## மக்கள் ஏற்றுக்கொள்ளாத சட்டங்கள் வெற்றுக் காகிதங்களேதான் - அனுர

அடக்குமுறையை முன்னெடுப்பதற்காக எந்தச் சட்டத்தை ஜனாதிபதி ரணில் நிறைவேற்றினாலும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளாத வரையில் அது சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படாது. அவை வெறும் காகிதங்கள்தான் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவுக்கு சென்றுள்ள அவர் ஞாயிற்றுக் கிழமை அங்குள்ள இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றினார். அங்கு அவர் தெரிவித்ததாவது:.

நெருக்கடியான நிலைமையில் ஜனாதிபதிய ரணில் அடக்குமுறையான சட்டங்களை கொண்டு வருவதற்கு யோசிகிறார். தொழிற்சங்கப்போராட்டங்கள் முன்னெடுக்கும்படுவதால் அவர் அதனை யோசிக்கிறார். சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப் படுத்தி தொழிற்சங்க நடவடிக்கைகளை தோற்கடிக்க முயற்சிக்கிறார்..

இப்படி ☞2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் அத்துமீறும் மதக் கட்டுமானங்கள்தான் பெரும் பேசுபொருள். ஆங்காங்கே புதிது புதிதாக முளைக்கும் சிலைகள், விகாரைகள், திருச்சொரூபங்கள் சர்ச்சைகளைக் கிளப்பி வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தபோது இதுபோன்ற எந்தச் சர்ச்சைகளும் எழுந்ததில்லை. ஏனெனில் அவர்கள் இது போன்ற விடயங்களை முளையிலேயே கிள்ளிவிடுவார்கள். மீறி நடப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற அச்சமே யாரையும் இதுபோன்ற தான்தோன்றித்தனமான நடவடிகைகளில் ஈடுபடத் தூண்டாது. இப்போது அவர்கள் இல்லை என்பதால் தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆகிவிட்டான்.

இன்றைக்கு அதுபோன்றதொரு தண்டல்காரன் பற்றிய தகவல்களைத்தான் உங்களுடன் பகிர்ந்துகொளள்ளப்போகின்றேன். ☞2

## நாட்டை முன்னேற்றும் திறமை ரணிலிடமுண்டு

### இப்படிச் சொல்கிறார் ஐதேக தவிசாளர்



அனைத்துத்தரப்பினரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாட்டை முன்னேற்றும் திறமை தேசியத் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத் தில் உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலியில் ஞாயிற்றுக் கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை பொருளாதார ரீதியில் மீட்டெடுக்கும் முயற்சிகளுக்கே தற்போது முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இந்தச் செயற் பாட்டில் அனைத்து தரப்பின ரையும் அரசியலுக்கு அப்பால் கைகோர்க்கமாறு ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்ககோரியுள்ளார்.

என்னைப் பொறுத்தவரையில் அடுத்துவரும் காலப்பகுதியில் அவர் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைந்து அந்தப் பயணத்தினைத் தொடங்குவார். அதற்கான திறமை அவரிடத்தில் உள்ளது.

தேசிய தலைவரான அவர், அந்தச் செயற்பாட்டை நிச்சயமாக முன்னெடுத்து நாட்டினை மீட்டெடுப்பார். ஆகவே எந்தவொரு தரப்பினரும் விரும்பியோ விரும்பாமலோ ஒன்ணைந்துபுதியபயணத்தினைத்தொடங்க வேண்டியுள்ளது - என்றார்.

## ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் சேரவேசேராது

### அவை வெறும் புனைவுகள் என்கிறார் சஜித்

பிரதமர், அமைச்சர்பதவிகளைப் பெற்று இந்த ஆட்சியில் இணைந்து கொள்ளப் போகின்றோம் என்பது, ஆளும்கட்சியினால் புனையப் பட்ட செய்தியாகும் எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின்தலைவருமானசஜித் பிரேமதாச ஆட்சியாளர்கள் போலியானசெய்திகள்ஊடாக ஐக்கிய மக்கள் சக்தியை சிதைக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேசமதாச ஞாயிற்றுக்ககிழமை விடுத்த விசேட ஊடக அறிக்கையிலேயே மேலும் தெரிவித்துள்ளதாவது:

பிரதமர் மற்றும் அமைச்சுப் பதவிகளைப் பகிர்வது போன்ற சலுகைகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியும், நானும் ஆட்சியாளர்களுடன் இணைவதற்குத் தயாராகி ☞2

## ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தை நிராகரித்தது முன்னணி

-எஸ்.நிதர்ஷன்-

இலங்கைஆட்சியாளர்கள்பொருளாதார மீட்சிக்காக பன்னாட்டுச் செலாவணி நிதியத்துடன் (ஐஎம்எவ்) செய்துகொண்ட ஒப்பந்தத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்துள்ளது.

“மக்கள் பிரதிநிதிகளுக்கோ அல்லது மக்களுக்கோ வெளிப் படுத்தாமல் இரகசியமான முறையில் மக்கள் ஆணை இல்லாத ஆட்சியாளர்களுடன் பேசி செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை எவ்வாறு சட்டமாக்க முடியும்? இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது”

எனதமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியெழுப்பினார்.

யாழ். கொடிகாமத்தில் வைத்து ஐஎம்எப் ஒப்பந்தம் தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது...

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சி ஐஎம்எப் உடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து வாக்கெடுப்பு நடத்தி அதனை நிறைவேற்றி சட்டமூலமாக்க உள்ளதாக அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

இதன் பின்னணியை நாங்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது ஐ எம் எப் உடனான பேச்சு, ஒப்பந் தங்கள் குறித்து வெளிப்படுத்த வேண்டுமென நாடாளுமன்றத்தில் அனைத்து தரப்புகளாலும் பல தடவைகள் கேட்கப்பட்டபோதிலும் அது எதனையும் அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை. ☞2

## தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் அடயாளப் போராட்டம் நேற்று நிறைவு

தமிழர்மரபுரிமைகளைப் பாதுகாப்போம்

என்றதொனிப்பொருளில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்புப்போராட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை பழரசம் வழங்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டது.



தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாப்போம்

என்றதொனிப்பொருளில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு என்ற புதிய அமைப்பால் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டமும் கையெழுத்துப்போராட்டமும் நல்லூரில் நேற்றுக் காலை தொடங்கியது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அருகில் காலை 9 மணியளவில் தொடங்கிய போராட்டம் 3.30 மணியளவில் பழரசம் வழங்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.வி.விக்னேஸ்வரன், சி.சிறிதரன், த.சித்தார்த்தன், முன்னாள் ☞2

## அன்னை பூபதி ஊர்தி நேற்று கிழக்கு நோக்கிப் புறப்பாடு

அன்னை பூபதியின் 35வது நினைவுதினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஊர்திப்பவனி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய இந்த ஊர்திப்பவனி மதியம் 01 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன்நினைவிடமுன்றலில் இருந்து தொடங்கியது.

நல்லூரில் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தினர்.



இந்த ஊர்தியானது தமிழர் தாயகத்தை வலம்வந்து மட்டக்களப்பிலிருக்கும் அன்னை பூபதி நினைவிடத்தை சென்றடையும்-

இந்தஊர்திஇன்றுமாலை கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தின் முன் தரித்து நின்றபோது மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

ஏப்ரல் 19 மட்டக்களப்பு மாமாங்கத்தைச் சென்றடையவுள்ள இந்த ஊர்திப் பவனி நேற்று பளை, ஆனையிரவு, பரந்தன் ஊடாக முல்லைத்தீவு கொக்கிலாய் வரைசென்றடையவிருந்தது.

## குரங்குடன் மயில்களையும் ஏற்றுமதி செய்யவேண்டும்

### ஐ.தே.க. கோரிக்கை

ந.லோகதயாளன்.

சீனாவிற்குகுரங்குகளை மட்டுமல்ல மயில்களையும் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு செங் குரங்கு வகையான சிறுவன் குரங்குகளை ஏற்றுமதி செய்யும் யோசனை தொடர்பில் வெளிவரும்செய்திகள்குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப்பதிலளித்தபோது அவர் இதனைத்தெரிவித்தார்.

நாட்டில் தற்போது குரங்குகள் மட்டுமன்றி மயில்களும் பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்து கின்றன. இதனால் விவசாயிகள் பெரும. நஸ்டத்தையும் கவலையினையும். அடைந்துள்ளனர்.

சுற்றுச்சூழல்ஆர்வலர்கள் உட்பட செங் குரங்குகளை ஏற்றுமதி செய்வதை எதிர்க்கும் தரப்பினர், வண்ணாத்திவில்லு, ஆனமடுவ, அனுராதபுரம் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று அங்கிருக்கும் தோட்டங்களுக்கு இந்த குரங்குகள் மற்றும் மயில்களால் ஏற்படும் பாதிப்பைப் பார்க்க வேண்டும். அங்கு, விவசாய சமூகம் அனுபவிக்கும் இழப்பையும் காணவேண்டும் என்று அவர் ☞2

## பண்ணை நாகபூசனி சிலையை அகற்றுவதில் பொலிஸ் தீவிரம்

### அனுமதியைக் காட்டாவிட்டால் அகற்றப்படும் என அறிவிப்பு

நயினாதீவு நாகபூசணி அம்மன் வீற்றிருக்கும் தீவகத்தின் நுழைவாயிலான யாழ்ப்பாணச்சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுவதற்கான சட்ட நடவடிக்கைகளை யாழ். பொலிஸார் தாக்கல் செய்துள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு அது தொடர்பான அறிவித்தல் பொலிஸாரால் சிலைக்கு முன்பாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தமனு மீதான விசாரணை ஏப்ரல் 18 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் குறித்த அம்மன் சிலை தொடர்பில் முக்கிய கலந்துரையாடலொன்று இன்று மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லைஆதீனசுவாமிகள் தலைமையில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் அனைத்து இந்து சமய அமைப்புகள், ஆலய அறங்காவலர்கள், சைவ அபிமானிகள் என அனைவரையும் கலந்து கொள்ளு ☞2

## வடக்கில் சீனாவிற்குக் காணியா? அது சிறிதரன் எம்பியின் உளறல்

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்

- எஸ்.நிதர்ஷன்-

வடக்கில் சீனாவிற்கு காணிவழங்கப்படபோவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்வைத்துள்ள குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இல்லை. அது அவரின் உளறல் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடக்கில் சில இடங்களில் சீனாவிற்கு காணி வழங்கப் படப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்த விடயம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேள்கண்டவாறு தெரிவித் தார். மேலும்தெரிவித்ததாவது:

பினாமி அரசியல் சூனிய அரசியல் நடத்துபவர்கள் அல்லது பிரச்சனைகளைதீராப் பிரச்சினைகளாகவைத்திருக்க விரும்புபவர்களின் உளறலாக அது இருக்கலாமே ஒழிய அதில் எந்த உண்மையும் இல்லை.

இந்த அரசியல்வாதிகள் மக்களைக் குழப்பி குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயற்சிக்கிறார்கள். அதுதான் அவர்களின் வரலாறாகவும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

எனக்குத் தெரியக்கூடிய வகையில் அப்படிக் காணிகள் கொடுக்கப்பட இருப்பதாகத் தெரியவில்லை - என்றார்.

இதேவேளை தீவுகளை இணைத்து தீவக அதிகார சபைநிறுவும்திட்டம் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித்திரைப் புத்தாண்டு அதிகாலைவேளை பண்ணைச்சுற்றுவட்டப்பகுதியில் ஓர் அம்மன் சிலை திடீரென வைக்கப்பட்டது. அருகிலே அதிரடிப் படை முகாம் இருக்கத்தக்கதாக, 250 மீற்றர் தூரத்திலே பொலிஸ் நிலையம்இருக்கத்தக்கதாகப் பகிரங்கமாக, பீடம், அதற்கு மேலே ஒரு சிமெந்துத் தட்டு சிலை என்பவற்றை எடுத்து வந்து பொறுமயாக ஒன்றின் மீது ஒன்று வைத்து சிலையைப்பொருத்திவிட்டுப் போய்விட்டார்கள்.

யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. சிலை வைக்கப்பட்ட இடத்திற்கு இரண்டு பக்கமும் பொலிஸாரும் அதிரடிப் படையினரும் இருந்திருந்தாலும் சிலையை வைத்தவர்கள் யார் என்பது தெரியாது. அது பற்றி யாரும் தொடக்கத்தில் அலட்டிக்கொள்ளவில்லை. அதன் பின்னர் சில தூண்டுதல்களின்பேரிலேயே அதற்கெதிரான நடவடிக்கைகள் தொடங்கின. இந்தத் தூண்டுதல்கள் யாரால், எப்போது, எங்கேயிருந்து வந்தன என்பது பற்றி உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை என்ற போதும், இது தொடர்பில் நடந்த சம்பவம் ஒன்றை உறுதிப்படுத்த முடிந்தது.

பண்ணைச் சிலை வைப்புச் சர்ச்சைக்குள் மூக்கை நுழைத்து கடுமையாகத் துள்ளிக் குதித்திருக்கிறார் வடக்கு மாகாண சபை அதிகாரி ஒருவர். நோயாளர்களின் அவசரத்துக்கு என ஒதுக்கப்பட்ட அரச வாகனத்தில் தனது குடும்பத்தினரையும்அழைத்துக்கொண்டுநயினாதீவுக்குச் சுற்றுலாச் சென்ற இந்த அதிகாரி சிலை பற்றி அங்கு நின்றபடி கடுமையாக சுடுதண்ணீர் கொட்டிய நாயாகஊளையிட்டிருக்கிறார்.

அமைச்சரின் செல்வாக்கைப்பயன்படுத்திக்கொண்டு வடக்கின் உயிர் காப்புத் துறைக்குள்நுழைந்த இந்தப் பெரும்பான்மையின அதிகாரி, அண்மைக் காலமாக இங்குள்ள படை அதிகாரிகளுடன் கடும் நெருக்கத்தை வளர்த்துக் கொண்டுள்ளார். அதாவது அவரது வாகனம் சென்றால் பலாலி படை முகாமின் கதவுகள் அகலத் திறந்து அவர் நேரே முகாம் ஊடான பாதை வழியாக மறுபுறத்தில் வெளியேறும் அளவிற்குப் படையினர் மத்தியில் அவரது செல்வாக்கு உயர்ந்துள்ளது.

இந்தத்தொடுப்புகள்தந்த உணர்வோ என்னவோ அவர் இந்தச் சிலைவைப்பு விவகாரத்தில் ஒரு பௌத்த சிங்களவாதியாகத்தன்னைக் காட்டிக்கொள்வதில் தீவிரமாக இருக்கிறார். பண்ணையில் வைக்கப்பட்டுள்ள அம்மன் சிலையை அகற்றவேண்டும் என்பதில் அவர் விடாப்பிடியாக இருந்திருக்கிறார்.

நயினாதீவுக்குச் சென்ற அவர் அங்குள்ள விகாராதிபதியோடு பொலிஸ் உயர் அதிகாரிகளும்கலந்துகொண்ட ஒரு சந்திப்பில் வானத்துக்கும் பூமிக்கும் துள்ளிக் குதித்துள்ளார். சனிக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பண்ணையில் வைக்கப்பட்டுள்ள அம்மன் சிலை அகற்றப்பட்டேயாகவேண்டும் என்றும் இந்த சுத்தம் சுகம் தரும் அதிகாரி கடுமையாக வாதாடியிருக்கிறார். அப்போது அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்ததாகக் கூறப்படுகின்றது. விகாராதிபதி அவரது கொதிப்பையெல்லாம் பார்த்தாலும் அமைதி காத்திருக்கிறார். பொலிஸ்மா உயரதிகாரி உடனே சிலை தொடர்பில் தாங்கள் ன்ன செய்யவேண்டும் என்று பதற்றப்பட்டுக்கேட்டபோது உடனடியாக ''டிக்டேட்'' செய்தவர் இந்த அதிகாரியே. கடகடவென்று அவர் கொட்டித் தீர்த்ததை ஒரு புன்சிரிப்போடு பார்த்துக்கொண்டிருந்தாரம் விகாரதிபதி.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்துகாட்சிகள்கட்டவிழத் தொடங்கின. பொலிஸார் நீதிமன்றத்தை நாடி மத நல்லிணக்கத்துக்குக்குந்தகம் விளைவிப்பதாகக்கூறிஅந்தச் சிலையைஅந்தஇடத்திலிருந்து அகற்றவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். எங்கிருந்தோ வேலைக்கு வந்தவர், இன்றைக்கு யாழ்ப்பாணத்தின் மத நல்லிணக்கத்துக்கு இந்து மதச் சிலை ஒன்று குந்தகம் என்று சொன்னார் என்பதற்காகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால்நீதிமன்றஉத்தரவை மீறி குருந்தூர் மலையில் விகாரை கட்டப்பட்டது தொடர்பில் மட்டும் எதுவும் செய்யாமல் கையைக்கட்டி வாயைப் பொத்தி நிற்பார்கள்.

இதைத்தான் ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டிய கதை என்பதோ....!

**இடிமின்னல்**

## ஐக்கிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறோம் என்ற புதிய செய்தியை ஆட்சி சார்புக் குழுக்கள் உருவாக்கி சமூகமயமாக்கியுள்ளன. இந்தப் போலிச் செய்தியை முற்றாக நிராகரிப்பதுடன், போலிச் செய்தியை வெளியிட்மைக்காக கண்டனங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ராஜபக் ஷ ஆட்சியின் நீட்சியாக இருக்கும் தற்போதைய ஆட்சி,, கடந்த அரசாங்கத்தைவிட மோசமாக, பாதாளத்திற்குள் நாட்டைத் தள்ளும் போக்கில் செயற்படுகின்றது என்று தொடக்கத்திலேயே நாம் எச்சரித்துள்ளோம். விரைவில் இந்த ஆட்சீயின் தோல்வியடைந்த வேலைத்திட்டம் அப்பட்டமாக வெளிப்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியினைப் பற்றி போலிச் செய்திகளைப் பரப்பி த் தனது தோல்வியான நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த ஆட்சித் தரப்பு தொடர்ச்சியாக முயற்சிக்கின்றது.

முதலாளித்துவ கும்பலுக்கும் பிற்போக்கு சக்திகளுக்கும் ஒரே சவாலாக இருப்பது ஒன்றுபட்ட மக்கள் சக்தியைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்திதான், அந்த மக்கள் சக்திக்கு கேடு விளைவிப்பதற்காக எந்த விலையையும் கொடுக்க அந்தக் கும்பல்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஒரு குழு ஆட்சியில் இணையப்போவதாகத் தொடர்ந்து போலியான செய்திகளை வெளியிட்ட கும்பல், பிரதமர், அமைச்சர் பதவிகளுக்காகஐக்கியமக்கள் சக்தி ஆட்சியாளர்களுடன் இணையும் என்ற புதுச் செய்தியை வெளியிட்டுள்ளார்கள். அவர்களின் அண்மைய உத்தியாக இது காணப்படுகின்றபோதும் அது அப்பட்டமான பொய் என்பதோடுஆதாரமற்றசெய்தி என்றும் நிராகரிக்கின்றோம்.

அந்தக் குழுவானது, ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகளை ஏற்படுத்துவதன் ஊடாகப் பேரம் பேச முடியும் என்றும் அதன் ஊடாக எமது தரப்பிற்குள் சிதைவுகளை ஏற்படுத்த முடியும் என்றும் நம்புகின்றார்கள்.

அதேநேரத்தில் நாங்கள் நாட்டின் மீட்சியையும் மக்களின் எதிர்காலத்தினையும் நம்புகிறோம். இந்தத் துரதிர்ஷ்டவசமான ஆட்சியாளர்களிடமிருந்து எமது நாட்டை தேர்தலால் மட்டுமே காப்பாற்ற முடியும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இந்நாட்டில் இயங்கும் நாகரீக ஊடகங்களில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் எம்மைப்பற்றி போலிச்செய்திகளை வெளியிடும் ஒரு சில கைக்கூலி ஊடகங்கள் உள்ளன. ஆகவே ஊடகங்களைமுறைகேடாகப் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்படுவதோடு ஊட கங்கள் விடயங்களை புரிந்து கொள்வதும் நல்லதாகும்.

ஒருசில ஊடகங்கள் அவர்களுக்குகொடுக்கப்பட்ட விலைக்கு எந்தவொரு கட்டுக்கதையையும் சமூகமயமாக்குவதற்குப் பதிலாக, தமது ஊடகங்களை புத்திசாலித்தனமாகவும் நெறிமுறையாகவும் பயன்படுத்தவேண்டும்என்று நாங்கள்பரிந்துரைக்கிறோம்.

குறித்த ஊடகங்கள் அவர்களின் உரிமையாளர்களின் கருத்தைப் பிரபலப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் அனுதாபம்தெரிவிக்கிறோம். மக்களால் உண்மையை மாற்ற முடியாது, ஆனால் உண்மைமக்களைமாற்றும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம்.

கடந்து செல்லும் ஒவ்வொரு நொடியும் நம் நாட்டின் அப்பாவி மற்றும் ஆதரவற்ற மக்களின் வாழ்க்கையின்தலைவிதிக்கு ஆபத்தானது என்பதை ஆட்சியாளர்களுக்கு வலியுறுத்துகிறோம், மேலும் அந்தமக்களின்வாழ்க்கையை மகிழ்ச்சியடையச்செய்வதற்கு நேரத்தை ஒதுக்குவதற்குப் பதிலாக, பேரங்கள், சதிகள் போன்றவற்றில் ஈடுபடுவதை நிறுத்துவதே சிறந்தது - என்றுள்ளது.

## தமிழர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, சுரேஸ் பிறேமச்சந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள்,

அகில இலங்கை சைவ மகா சபை, தமிழ்ச் சைவப் பேரவை மற்றும் சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிறிஸ்தவ மதத் தலைவர்கள், அரிசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அழிக்கப்பட்ட வெடுக்கு நாறிமலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகளை உடனடியாக மீள் நிர்மாணம்செய்யவேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

குருந்தூர் மலை, கண்ணியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன், அங்கு புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் தொடர்பான புதிய வர்த்தமானி நீக்கப்படவேண்டும்.

இன மத நல்லிணக்கத்தைச்சீர்குலைக்கும்தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

மட்டு. மயிலத்தனைமடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ்ப் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமைஉறுதிப்படுத்தபட வேண்டும்.

போருக்கு பிந்திய காலத்தில் இனமதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பெரும்குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் - ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## பண்ணை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கேட்கப் பட்டுள்ளது.

சிலைக்கு முன்பாகப் பொலிஸாரால் காட்சிப் படுத்தப்பட்டுள்ள அறிவித்தலில், இந்தச் சிலையை வைத்தவர்கள்அதற்கானமுன் அனுமதிகளைப் பெற்றிருந்தால்அவற்றைநீதிமன்றத்தில் முன்வைக்கும்படியும்தவறின் சிலை அகற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சிலைபண்ணைச் சுற்றுவட்டப்பகுதியில்அமைந்திருப்பது போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் இன ஐக்கியத்துக்குக்குந்தமாகவும் இருப்பதாகப் பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டுள்ளனர். ஆனால்போக்குவரத்துக்கு எந்தவிதத்திலும் இடைஞ்சலாக அந்தச் சிலை வைக்கப்படவில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எவருக்கும் இடைஞ்சல் இல்லாத வகையில் ஆள்நடமாட்டம் அற்ற ஓரிடத்திலேயே சிலை வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அந்த இடத்தில் சிலை இருப்பது இன ஐக்கியத்தை எந்தவிதத்தில் பாதிக்கிறது என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இலங்கையின் புகழ்பெற்ற மதத் தலங்கள் இருக்கும் இடங்களின் பிரதான வீதியோரங்களில்இதுபோன்று அந்த மதத் தலங்களைக் குறிக்கும் வகையிலான சுருவங்கள், சிலைகள், விகாரைக்கான குறியீடுகள் அமைக்கப்பட்டுள்ளநிலையில் இதுமட்டும்எப்படிஅமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## வடக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில்கேட்டபோது, இலங்கையில் பல தீவுகள் இருக்கின்றன. அது சம்பந்தமாக அமைச்சரவைப் பத்திரங்களும் கொண்டு வரப்பட்டன. அதில் என்னுடைய அக்கறையென்பது வட கிழக்கு மாகாணங்களில் அதன் நிர்வாகம் அதில் முடிவெடுக்கிற உரிமை யாருக்கு இருப்பது என்பதில்தான் இருந்தது.

அது இன்னும் முடிவாகவில்லை. அப்படி வருமாக இருந்தால் அதனை உரிய முறையில் பார்த்து நடவடிக்கைகளை எடுப்போம்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பலதீவுகள் இருக்கின்றன. அதில் பெரிய தீவுகள் என்றால் கச்சதீவுநெடுந்தீவுஅனலைதீவு எழுவைதீவுபோன்றவற்றைச் சொல்லலாம்.

இதுவரையில் அந்தத் தீவுகள் எப்படி இருந்தனவோ அதேபோன்றே அவை இருக்க முடியுமே தவிர அதை மீறி இருக்க முடியாது. அந்தந்த மாவட்டச் செயலரிகளின் நடவடிக்கைகளுக்கு அமையவே எதுவும் நடக்கும்.

அபிவிருத்திக்காக அவர்கள் சில முதலீடுகளை கொண்டு வரலாமே ஒழிய அந்தந்தப் பகுதிகளில் இருக்க கூடிய மக்களுடைய நியாயமானஉணர்வுகளுக்கு மதிப்பளித்துதான் அது செய்யப்படும் - என்றார்.

## ஐ.எம்.எவ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் இரகசியமான முறையில் பேசி ஒப்பந்தத்தைச் செய்துவிட்டு தற்போது நாடாளுமன்றத்திற்கு அதனைக் கொண்டு வருவதாக இருந்தால் அதற்கு ஒரே ஒரு நோக்கம்தான்இருக்கமுடியும். அதாவது இந்த ஆட்சிக்குச் செல்வாக்கு இருக்காது என்று ஜஎம்எப்சொல்லிஇருக்கலாம். அதிலும்ரணில்விக்கிரமசிங்க மக்களால்நிராகரிக்கப்பட்டவர் என்றவகையிலும்ஏற்கனவே நாடாளுமன்றத்தில் மக்கள் நிராகரிக்கின்ற ஒரு தரப்பின் ஆதரவுடன் வாக்கெடுப்பின் ஊடாக நியமிக்கப்பட்டவர் என்ற அடிப்படையிலும் அவர் செய்கின்ற ஒப்பந்தத்திற்கு எவ்வளவு தூரத்திற்கு மக்கள் ஆதரவு இருக்கும் என்ற கேள்வியை எழுப்பி இருக்கலாம்.

இந் நிலையில் எதிர் காலத்தில் ஆட்சி மாறினாலும் என்ற ஐயம் ஏற்படுவதாலும் அந்த ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே இதனை ஒரு சட்டமாக்கும்படி கேட்டிருக்கலாம்.

எங்களைப் பொறுத்த வரையிலே இந்த ஐ எம் எப் தொடர்பான ஒப்பந்தம் எந்த தரப்போடும் எந்த விதத்திலும் பேசப்படாமல், மக்களுடையவிருப்பங்களை பிரதிபலிக்காமல் வெறுமனே தோற்றுப்போன, மக்கள் ஆதரவுஇல்லாதஒருதரப்புடன் இரகசிய பேச்சு நடத்திச் செய்யப்பட்டவை. இந்த ஒப்பந்தங்கள்என்பதுஎந்தளவு தூரத்திற்கு மக்களால் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்ற கேள்வி இருக்கிறது.

மக்களுடையபிரதிநிதிகள் என்றவகையில்மக்களுக்காக நேர்மையாக பயணிக்கின்ற எம்மை போன்றவர்கள் இந்த ஒப்பந்தத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்ளலாம்?

அதாவது எங்களுக்கு காட்டாமல் எங்களுடைய அனுமதி இல்லாமல் எங்கள் கருத்துக்களைக் கூடக் கேட்காமல்நிறைவேற்றப்பட்ட ஓர் ஒப்பந்தத்தை நாம் எவ்வாறு ஆதரிக்கலாம் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

ஐ எம் எப் அமைப்பாக இருக்கலாம் அல்லது இலங்கைக்கு உதவிகளை கொடுக்கின்ற மற்றைய நாடுகளாகஇருக்கலாம்அவை அனைத்தும்மக்களால்ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆட்சியும் நாடாளுமன்றமும்இருக்கின்ற பின்னணியில் மட்டுமேதான் ஒப்பந்தங்களைச் செய்யவேண்டும். அப்போதுதான் அது நின்றுபிடிக்கும்.

ஆகவே மக்கள் பிரதிநிதிகளுக்கோ அல்லது மக்களுக்கோ வெளிப்படுத்தாமல் இரகசியமான முறையில் மக்கள் ஆணை இல்லாத ஆட்சியாளர்கள்தாங்களாகவே பேசி செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை எவ்வாறு சட்டமாக்க முடியும்? இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

அந்த வகையிலே நாம் மீண்டும் மீண்டும் சொல்வது என்னவெனில் இன்றைக்கு தேவைப்படுவது ஒரு புதிய நாடாளுமன்றத் தேர்தல்தான். அத்தகைய தேர்தலின்ஊடாகமட்டும்தான் ஒரு உறுதிப்பாட்டை உருவாக்கலாம். மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு நாடாளுமன்றம் ஊடாகத்தான் நின்று பிடிக்கக்கூடிய சூழலை ஏற்படுத்தலாம் என்பதையும் நாங்கள் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம் - என்றார்

## மக்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொன்றையும் தனித்தனியே செய்யாமல் அனைத்தையும் ஒன்றாக மேற்கொள்வதற்குஜனாதிபதி ரணில் முனைகிறார். யாராவது, தனக்கு எதிராக, எழுதினால், பேசினால், போராட்டங்களை முன்னெடுத்தால் அவர்களைத் தடை செய்வதற்கு முனைகின்றார். அவர்களுக்காக யாராவது குரல்கொடுத்தால் அதனையும் அடக்குவதற்கு முனைகின்றார். அந்த அடக்குமுறைக்கு எதிராக முகநூலில் யாராவது குரல்கொடுத்தால் அவர்களைக் கைது செய்வதற்கு முனைகின்றார்.

இந்த இடத்தில் ஒருவிடத்தினைச் குறிப்பிட்டாக வேண் டும். கோட்டாபய ராஜபக் ஷ 69இலட்சம் வாக்குகளைப் பெற்று ஆட்சியில் அமர்ந்தார். அவர் ஐந்து வருடங்கள் பதவியில் இருந்திருக்க முடியும் . ஆனால்அவரால்இரண்டரை வருடங்கள்கூடத் தாக்குப்பிடிக்க முடிந்திருக்கவில்லை.

அதேபோலத்தான், ரணில் விக்கிரமசிங்க சட்டங்களை இயற்றலாம். நடைமுறைப்படுத்தலாம். ஆனால்பொதுமக்கள்ஏற்றுக் கொள்ளாது விட்டால் அவை வெறுமனே கடதாசியில் உள்ள எழுத்துக்கள் தான்.

ஆகவே, மக்களின் விருப்புக்கு மாறாக ரணில் எந்தச் சட்டங்களை நிறைவேற்றினாலும், அது நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமாக கொள்ளப் படமாட்டாது -என்றார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22






காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் சீனா இன்றி கடன் மறுசீரமைப்புப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளன



கடன் மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பில் இலங்கையுடன் நெருங்கிய தொடர்பாடல்களை பேணி வருவதாக சீனா தெரிவித்துள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளார் வாங்வென்பின் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கிய சீனா இல்லாமல், இலங்கையும், அதற்கு கடன் வழங்கிய முக்கிய நாடுகளும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளை ஆரம்பித்துள்ளன. இது மூன்றாம் உலக நாடுகளின் கடன் தொடர்பான சீனாவின் அணுகுமுறை மீது ஏற்பட்ட விரக்தியை வெளிப்படுத்துவது போலுள்ளது.

சீனா இல்லாமல் பேச்சுகள் முன்னோக்கி நகர்வது குறித்த சீனாவின் நிலைப்பாடு என்னவென செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு பதிலளித்துள்ள வாங் வென்பின் இலங்கையின் கடன் நிவாரணம் குறித்த சீனாவின் நிலைப்பாட்டை நாங்கள் பலதடவை பகிர்ந்துகொண்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

நியாயமான சுமை பகிர்வு என்ற கொள்கையின் கீழ் வர்த்தக இருதரப்பு கடன் வழங்குநர்களை இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுமாறு நாங்கள் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இலங்கையுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றோம் கடன் மறுசீரமைப்பு விவகாரங்கள் தொடர்பில் சீனாவின் நிறுவனங்கள் இலங்கையுடன் பேச்சுகள் மேற்கொள்வதை நாங்கள் ஆதரிக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியரின் மோட்டார் சைக்கிளை திருடி பேஸ்புக்கில் விற்பனைக்காக விளம்பரம் செய்த மாணவன் கைது!

## நாரம்மலவில் சம்பவம்

ஆசிரியர் ஒருவரின் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளொன்று, அவரது வகுப்பு மாணவர் ஒருவரால் பேஸ்புக்கில் விற்பனைக்காக பதிவிடப்பட்டுள்ளதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கடந்த வெள்ளிக்கிழமை இரவு நாரம்மல பகுதியில் உள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவரின் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிள், அவரது வீட்டு வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது திருடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அவர் நாரம்மல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பாகத் தனது வகுப்பு மாணவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதனால் கவலையடைந்த அவரது மாணவர் ஒருவர், தனது முகநூல் பக்கத்தில் குறித்த மோட்டார் சைக்கிள் விற்பனை தொடர்பாக வெளியிட்ட விவரங்களைப் பார்த்தபோது, தான் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை போன்றே விற்பனைக்கு விளம்பரப்படுத்தப்பட்டுள்ள சைக்கிளும் காணப்பட்டதை ஆசிரியர் அவதானித்துள்ளார்.

இது தொடர்பாக தகவல் வழங்கப்பட்டதையடுத்து, பன்னல மாகந்துர பிரதேசத்தில் உள்ள குறிப்பிட்ட இடமொன்றுக்கு மோட்டார் சைக்கிள் கொண்டு வரப்பட்டபோது, மோட்டார் சைக்கிளுடன் அதனை கொண்டு வந்த நபரையும் கைதுசெய்ய முடிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# காணாமல்போன சிறுவன் சடலமாக மீட்பு!



காலி - நெலுவ பிரதேசத்தில் காணாமல்போயிருந்த சிறுவன் ஒருவன், வீட்டிற்கு அருகிலுள்ள குறுக்கு வீதியொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2 வயதும் 8 மாதங்களுமேயான சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை முதல் காணாமல்போன இந்தச்சிறுவனைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் ஈடுபட்டிருந்தனர்.

அளுத்கம - தர்கா நகரைச் சேர்ந்த இந்தச் சிறுவன் புத்தாண்டுக்காக நெலுவ பிரதேசத்தில் உள்ள தனது பாட்டி வீட்டிற்குத் தாயுடன் சென்றிருந்தபோது காணாமல் போயுள்ளார்.

இந்தநிலையில், இன்று காலை குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார் என்று நெலுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெலுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

# கண்டியில் இசைக் கச்சேரியில் கைகலப்பு தடுக்கச் சென்ற கான்ஸ்டபிள் படு காயம்!

கண்டி, கெட்டம்பேபிரதேசத்தில் உள்ள ஹோட்டலில், வெளியரங்கில் 13 ஆம் திகதி இரவு நடைபெற்ற இசைக்கச்சேரியில் இடம்பெற்ற கைகலப்பை தடுப்பதற்கு சென்றிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், கீழே விழுந்துகாயமடைந்துள்ளார்.

மேற்படி பொலிஸ் கான்ஸ்டபில், பேராதனை வைத்தியசாலையில் சிகிட்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தரின் முழங்கைக்கு அருகில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

# நெடுஞ்சாலைகளின் ஒரு நாள் வருமானம் 35 மில்லியன் ரூபா!

நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகளின் 15 ஆம் திகதி சனிக்கிழமை வருமானம் 35 மில்லியன் ரூபா என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

15 ஆம் திகதி 126,760 வாகனங்கள் நெடுஞ்சாலைகளை பயன்படுத்தின என அவர் மேலும் குறிப்பிட்டார்.



# பிள்ளையானின் வாகன தொடரணியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்!



இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் வாகனத் தொடரணியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உள்ளக வீதியில் சனிக்கிழமை மாலை இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு உள்ளக வீதிகளை இணைக் கின்ற நாற்சந்தியில் எதிரும் புதிருமாக வந்த பிள்ளையானின் வாகனத் தொடரணியில் பங்கேற்ற கெப் ரக வாகனமும் மறுமுனையில் வந்த மோட்டார் சைக்கிளும் மோதி இவ்விபத்து இடம்பெற்றது.

இதன் போது இந்த விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த 65 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டு விபத்திற்குள்ளான கெப் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றனர்.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெடுக்குநாறியும் பண்ணையும்

இலங்கையில் இனப் பகைமையை நீடிப்பதற்கும் தமிழ் மக்கள் தாம் இந்த நாட்டில் இரண்டாம் தரக் குடிமக்கள் என்று எண்ணத் தலைப்படுவதற்கும் முக்கிய காரணமாக அமைவதில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் காவல்துறையினரின் பங்குபணி முக்கியமானது. சட்டம் ஒழுங்கு அனைவருக்கும் சமம் என்று நேர்மையோடு நடக்கவேண்டியகாவல்துறையினர்தாம்பௌத்தசிங்கள இனவாதத்திற்குச் சேவை செய்யவேண்டியவர்கள் என்கிற விசுவாசத்தோடு பணியாற்ற முயற்சிப்பதே இதற்குக் காரணம்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஆதீனத்தின் அருகே ஓர் உணவு தவிர்ப்பு அடையாளப் போராட்டம் இடம்பெற்றது. வவுனியா மாவட்டம், நெடுங்கேணிப் பகுதியில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதி லிங்கம் உடைத்து அழிக்கப்பட்டு அங்கிருந்த சைவ ஆலம் நிர்மூலமாக்கப்பட்டதைக் கண்டித்தும் அத்தகைய செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என்கிற கோரிக்கை உட்பட இதுபோன்ற 5 கோரிக்கைகளை வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வெடுக்குநாறி மலையில் ஆதி லிங்கம் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஆலயம் அழிக்கப்பட்டு ஒரு மாத காலம் ஆகப்போகிறது. ஆனால், அதனைச் செய்தவர்கள் என்கிற சந்தேகத்தின் பேரில்கூட எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. அதேவேளை அந்த ஆலய அழிப்பு இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் பகைமையைமூட்டும்நடவடிக்கைஎன்கிறவகையில்அந்த இடத்தில் மீண்டும் ஆலயத்தை நிறுவாவிட்டாலும் சாமி சிலைகளையாவது வைப்பதற்கான நடவடிக்கைகளைக் கூட காவல்துறையினர் எடுக்கவில்லை.

ஆலயத்தை அழித்தவர்கள் தொடர்பில் உள்ளூர் மக்களிடமும் ஆலய நிர்வாகத்திடமும் சில பல தகவல்கள் இருக்கின்றன. யார் அதைச் செய்தார்கள் என்று அவர்களால் அடையாளம் காட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படியிருந்தும் சந்தேகநபர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாறாக சிலை வைக்கப்போனவர்களை மிரட்டிக் கைது செய்து அழைத்துச் சென்றது காவல்துறை. இந்த விடயத்தில் அமைச்சர்களான டக்ளஸ தேவானந்தா மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் தலையிட்டபோதுகூட தொல்பொருள்திணைக்களத்தைக் காரணம்காட்டி நழுவிக்கொண்டனர் காவல்துறையினர்.

அதேநேரம் பண்ணையில் ஓர் அம்மன் சிலை வைக்கப்பட்டதும் யாருடைய எழுத்துமூல முறைப்பாடும் இன்றி உடனடியாகவே அதனை அகற்றக் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கின்றனர். வழக்குத் தாக்கல் செய்கின்றனர். வீதி ஓரத்தில் வைக்கப்பட்டுள்ள அந்தச் சிலையால் இன, மத ஒற்றுமை பாதிக்கப்படும் என்று நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுகின்றனர். இப்படி ஒரு கண்ணுக்குச் சுன்னாம்பும் ஒரு கண்ணுக்கு மையும் வைக்கும் காவல்துறையினரின் நடவடிக்கைகள்தான் கடந்த காலங்களிலும் தமிழ் மக்களை இந்த நாட்டில் இருந்து அன்னியப்படுத்தின.

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவும், கட்டுப்பாடற்ற வன்முறைக்குச்செல்வதற்கும்காரணமாகஅமைந்தன. இப்போது வரலாறு மீண்டும் நிகழ்கிறது. இதனைத் தடுத்து நிறுத்தாமல் இந்த நாடு உருப்படாது. பௌத்த சிங்கள மேலாதிக்க வாதத்துக்குள் இருந்து சட்டம் ஒழுங்குத் துறையை முற்றாக வெளியே எடுத்து தூய்மைப்படுத்தி நேர்மையான, நியாயமான, ஊழலற்ற ஒரு துறையாக அதனை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்கவில்லையாயின் இனங்களுக்கு இடையில் மேலும் மேலும் குழப்பங்களை இந்த சட்டம் ஒழுங்குக் காவலர்களே ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள்.

# வவுனியா செட்டிகுளம் முகத்தான்குளம் கால்வாய் அமைக்க 404 மில்லியன் ரூபா!

### திலீபன் எம்.பி. தகவல்



வவுனியா செட்டிகுளம் முகத்தான்குளம் கால்வாய் அமைப்பதற்கு 404 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

'வவுனியா செட்டிகுளம் முகத்தான் குளத்தின் வயல் நிலங்களுக்குசீரானதண்ணீர் வரத்து இல்லாமையால் பல ஏக்கர் காணிகள் விதைக்கப்படாமல் இருந்து வருகின்றன.


சமீபத்தில்வவுனியாவில், நீர் பாசன அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பை சரியாகப் பயன்படுத்தியதால் 404 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இக்கால்வாய் 8 கி.மீ தூரத்துக்கு அமைக்கப்பட உள்ளது. இதனால், 950 ஏக்கர் நிலம் பயன்படும் என்று கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாகநீர்ப்பாசன திணைக்கள வவுனியா மாவட்ட பொறியியலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுடன்நேரில்சென்றுகமக்கார அமைப்பினரைசந்தித்துதிட்டம் தொடர்பாக தெரிவித்தோம்.

மேலும் 10 குளங்களை புனரமைப்பதற்கான அனுமதி பெற்றுக் கொண்டோம். அதற்கான நிதியும் விரைவில் கிடைக்கப் பெறும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

# அனைத்து அரச நிறுவனங்களையும் கோப் குழு முன் அழைக்க முடிவு!




இவ்வருடம் அனைத்து அரச நிறுவனங்களையும் அழைக்கதீர்மானிக்கப்பட்டுள்ளதாக கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி 420 அரச நிறுவனங்களுக்கு கோப் குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களை வருடாந்தம் கோப் குழுவின் முன்னிலையில் அழைக்க வேண்டியிருந்தாலும் அது உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம், காணி சீர்திருத்த ஆணைக்குழு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு உள்ளிட்ட 04 அரச நிறுவனங்கள் ஏப்ரல் மாதம் கோப் குழுவின் முன் அழைக்கப்படவுள்ளன.

அவற்றுள், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்மற்றும்காணி சீர்திருத்த ஆணைக்குழு என்பனஇவ்வருடம்ஆணைக் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அதன் தொடர்ச்சியாக அவை மீள அழைக்கப்படவுள்ளன.

# தந்தை செல்வா நினைவு தினம் வலி. மேற்கில் நேற்று அனுஸ்டிப்பு



தந்தை செல்வா நற்பணி மன்றத்தால்ஞாயிற்றுக்கிழமை வலி மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் தந்தை செல்வா நினைவுதினமும், சமூக சேவையாளர்கள் 20 பேருக்கான விருது வழங்கல் நிகழ்வும்வடமாகாணதந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் மகேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

விருந்தினர்கள் முத்து மாரியம்மன் ஆலய பூஜை வழிபாடுகளின் பின்னர் நாதஸ்வர மற்றும் பாண்ட் வாத்திய இசைகளோடு வழக்கம்பரை வலி. மேற்கு பிரதேச சபையின் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தந்தை செல்வாவின் நினைவுரைகளின் தொடர்ச்சியாக சமூக சேவையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு மதிப்பளிக்கப்படட்டது. டான் தொலைக் காட்சியின் ஊடகவியலாளர் சுலக்சனின் சேவையினைப் பாராட்டி தந்தை செல்வா விருது வழங்கப்பட்டது .

தொடர்ந்து மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும நிதியுதவிகளும் நாடாளுமன்ற ஈஸ்வரபாதம் சரவணபவனால் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் அவரது பாரியார் யசோதா சரவணபவனும் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர், வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத் தலைவர் மகேந்திரன் வடமாகாண நற்பணி மன்றத்தின் பொதுச் செயலாளர் தளையரட்ணம், சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு தமிழ்த் தேசிய முன்னணியும் எதிர்ப்பு

- எஸ்.நிதர்ஷன்-

பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை இன்றைக்குச் சிங்கள மக்களும் அனுபவிக்கத் தொடங்கியிருக்கின்றநிலையில்அந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என பலரும் கோரி வருகின்ற இச் சந்தர்ப்பத்தில் அதைவிட கொடிய சட்டம் கொண்டு கொண்டு வருவதை முற்றாக எதிர்ப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாகச் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பது முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டிய ஒரு சட்டம். அதிலும் தற்போது இருக்கக்கூடிய பயங்கரவாத தடுப்புச்சட்டத்தையும் விடவும் மிக மோசமான ஒரு சட்டம்.

அரசை எதிர்க்கின்ற அனைத்து தரப்புகளும் ஊடகங்கள் மற்றும் சாதாரண பொதுமக்களின் எதிர்ப்புகள் உட்பட அனைத்தும் பயங்கரவாதம் என்ற வரையறைக் குள்ளே சேர்க்கப்பட்டு குறிப்பாக அரசை எதிர்க்கிற தரப்புகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படக்கூடிய ஒரு மோசமான கொடூரமான சட்டமாகத்தான் நாங்கள் இதனைப் பார்க்கின்றோம்.

நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பயங்கரவாதத் தடை சட்டத்துக்குப் பதிலாக வேறு எந்தச் சட்டமும் கொண்டு வரப்படக் கூடாது. இந்தச் சட்ட விடயத்திலே தமிழ் மக்கள் மிகவும் பெரிய அளவில் அனுபவப்பட்டு இருக்கின்றார்கள். இன்றைக்கு சிங்கள மக்களும் அனுபவப் படத் தொடங்கி இருக்கின்றார்கள்.

ஆகவே இந்த சட்டத்தை எதிர்ப்பதற்கு அனைத்து தரப்புகளும் அதிலும் ஜனநாயகத்தை மதிக்கின்ற நீதிநேர்மையான அரசியலை விரும்புகின்ற அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஓரினசேர்க்கை குறித்த சந்தேகத்தில் பேக்கரி உரிமையாளர் கைதாகினார்

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ஓரினச் சேர்க்கை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பேக்கரி உரிமையாளர் ஒருவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பேக்கரி உரிமையாளர், தனது பேக்கரி வேலைகளுக்காக திருகோணமலை பிரதேசத்தில் இருந்து 20 வயது இளைஞர் ஒருவரை அழைத்து வந்து, தனது விடுதியில் தங்க வைத்துள்ளார்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இரவு அப்பகுதி மக்கள் பேக்கரி உரிமையாளரின் நடத்தையை அவதானித்துவிட்டு, பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, அந்த விடுதியை சுற்றிவளைத்த பொலிஸார் பேக்கரி உரிமையாளரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்ததுடன், குறித்த இளைஞரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இதேவேளை கைதானவர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# பெருந்தொகைப் போதைப்பொருட்களுடன் அறுவர் தெற்கு கடலில் வசமாகச் சிக்கினர்



இலங்கைக்குத் தெற்கே சர்வதேச கடற்பரப்பில் பெருமளவான போதைப்பொருட்கள் ஏற்றிச் சென்ற பல நாள் மீன்பிடிக் படகொன்று சுற்றிவளைக்கப்பட்டு 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் பெருமளவில் இருந்துள்ளன என்று தெரியவந்துள்ளது.

குறித்த படகுடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களைக் கரைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கடற்படை தெரிவித்துள்ளது. (02)

# பிலியந்தலை, பொல்கொட ஆற்றில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது!

பிலியந்தலை, ஹல்பிட்ட பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றின் பின்புறம் உள்ள பொல்கொட ஆற்றில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொல்கொட ஆற்றில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் சடலத்தை கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அணிந்திருந்த கறுப்பு காற்சட்டையின் இடது பக்க பொக்கெட்டிலிருந்து எடுக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி மூலம் சடலத்தை அடையாளம் காண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிலியந்தலை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கான்ஸ்டபிளை மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டு தப்ப முயன்றவர் கைது

உனவடுன, எரமுதுகஹா சந்தியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளை மோதிவிட்டு தப்பிச்செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என ஹபராதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உனவடுன, மாதரம்ப கெகுலனோவி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹபராதுவ பொலிஸ் நிலையத்தின் இரண்டு கான்ஸ்டபிள்கள் சனிக்கிழமை மாலை உனவடுன, எரமுதுகஹ சந்தியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்தபோது காலியிலிருந்து மாத்தறை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட்டபோதே இந்நச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# காலியில் ஒருவர் சுட்டுக் கொலை!

துப்பாக்கிச்சூட்டில் படு காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

36 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காலி, ததல்ல பகுதியில் நேற்றிரவு இந்தத் துப்பாக்கிச்சூடு இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்

அப் பகுதியில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் பின்னர் இரவு இசை நிகழ்ச்சியின் போது இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபான வியாபாரம் தொடர்பாக உயிரிழந்தவருக்கும் சந்தேகநபர்களுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவி வந்த பகைமையினால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (02)



# வாகன விபத்தில் 15 பேர் படுகாயம்



எம்பிலிப்பிட்டிய ஹிங்ரஹாரகல்வங்குவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 15 பேர் படுகாயமடைந்து எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 4.30 மணியளவில் கப்ரக வாகனம் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 6 குழந்தைகள், 4 ஆண்கள் மற்றும் 5 பெண்கள் படுகாயம் அடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிபிட்டிய தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

நாட்டின் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று (15) இரவு 11 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (02)




# மதுபானம் அருந்திவிட்டு மனைவியை மண்வெட்டியால் தாக்கமுயன்ற தந்தையை குத்தி கொலைசெய்த மகன்!



தனது தந்தையை போத்தலால் குத்திக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் அவரது மகன் கைதுசெய்யப் பட்டுள்ளார் என கஹடரெப்ப பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை, கந்தகொல்ல தம்பகஸ்கொட பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய வைத்தியசாலை ஊழியர் ஒருவரே சம்பவத்தில் உயிரி ழந்துள்ளார்.

சம்பவ தினமான வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் உயிரிழந்தவர் மதுபானம் அருந்திய நிலை யில் வீட்டுக்கு சென்று, தனது மனைவியை மண்வெட்டி யால் தாக்க முற்பட்டபோது, அவரது மகன் போத்தலை உடைத்து, தந்தையை தாக் கியமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS







### INCLUSION

- » 04 Night stay in Kuala Lumpur
- » Daily breakfast at hotel
- » Return AirTicket
- » Getting Highland tour with cable car
- » City tour on arrival day
- » Evening tour to twin tower
- » Batu caves temple visit
- » Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

**Travel Date: 19 - 23 May 2023**

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை 16.04.2023 கதிர் 30

## சீர்திருத்தங்களின் முன்னேற்றத்துக்கு உலக வங்கியின் அதிகாரி பாராட்டு

இலங்கை இதுவரை அடைந்துள்ள நிதி மற்றும் பொருளாதார நிர்வாகச் சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தைப் பாராட்டுவதாக உலக வங்கியின் தெற்காசியாவிற்கான பிராந்திய துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கிக் குழுவின் வசந்த காலக் கூட்டங்களில் பங்கேற்ற இலங்கையின் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையிலான இலங்கைக் குழுவினருடன் நடத்திய சந்திப்பின் 2

## பாடசாலை நாளை ஆரம்பம்; வதந்தியை நம்ப வேண்டாம்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

பாடசாலைகல்விநடவடிக்கைகள் நாளைமுதல் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாளை பாடசாலை விடுமுறை குறித்து பரவி வரும் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளை அரச பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு, அதற்குப் பதிலாக வேறொரு திகதியில் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்ற செய்தியைக் கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தக்குமார் நிராகரித்துள்ளார். (02)

# 2024ஆம் ஆண்டு தேர்தல் வருடம்

## முக்கிய தேர்தல்களை நடத்த ஏற்பாடு




2024 ஆம் ஆண்டு இலங்கையில் தேர்தல் வருடமாக அமையும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இதன்படி 2024 இல் உள்ளூராட்சி சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் என்று எல்லாத் தேர்தல்களும் இடம்பெறக்கூடும் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும், அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறும் எனவும், அதன்பின்னரே ஏனைய தேர்தல்கள் குறித்து முடிவெடுக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் இவ்வருடத்துக்குள் நடைபெறும் எனக் கூறப்பட்டாலும் அதற்கான சாத்தியம் குறைவு எனவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (02)

## 65 கிலோ கஞ்சாவுடன் படகும் மூன்று இந்தியர்களும் கைது



(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 65 கிலோ கஞ்சா படகுடன் கைப்பற்றப்பட்டுள்ளது. படகில் இருந்த 3 இந்தியர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவின் தூத்துக்குடிப் பகுதியில் இருந்து புறப்பட்ட படகில் இந்தக் கஞ்சா கடத்தி வரப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்தனர். இன்று அதிகாலை படகைக் கடற்படையினர் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக நெடுந்தீவுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## வடக்கில் காலூன்ற ஒருபோதும் சீனாவை அனுமதிக்க முடியாது

### சித்தார்த்தன் எம்பி திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கில் சீனா காலூன்றுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ள புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானதர்மலிங்கம்சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தேரிவித்ததாவது:

ஏப்ரல் 25 நாடாளுமன்றிற்குப் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வரப் போவதாக ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். இந்தப் புதிய சட்டமானது பழைய சட்டத்தைவிட மிக மிகக்கொடூரமானதும்பயங்கரமானதுமாகும். இது அதிக பாதிப்பைக்கொடுக்கக்கூடியது. ஆகையினால் இந்தச் சட்டத்தை நாங்கள் மாத்திரமல்ல சிங்கள மக்களே எதிர்க்கின்ற நிலை உள்ளது.

இப்போது உள்ள பயங்கரவாதச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதுடன் அந்தப் பயங்கரவாதத் தடைசட்டம் இல்லாமல் ஆக்கப்பட வேண்டும் என்றுதான் கோருகிறோம். இதில் திருத்தங்கள் கொண்டு வருவதோ அல்லது புதியதை கொண்டு வருவதையோ நாங்கள் அடியோடு எதிர்க்கிறோம்.

பழைய சட்டத்தை நீக்கியதாக சர்வதேசத்திற்கு காட்ட ஆட்சியாளர்கள் இந்த முயற்சியை எடுத்தாலும் சர்வதேசமே இன்று புதிய சட்டம் தேவையில்லை என கூறுகின்றது.

ஐ.எம்.எவ். ஒப்பந்த நிபந்தனைகளை சட்டமாக்க ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த ஒப்பந்தத்தில் என்ன உள்ளது என்பது இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை.

அதை ஆட்சியாளர்கள் உடனடியாக வெளிப்படுத்தவேண்டும். அரசியல் கட்சிகளுக்காவது முதற்கட்டமாக அதனைத் தெரியப்படுத்தவேண்டும்.

இலங்கையில் தற்போது சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. அதிலும் வடக்கில் காலூன்றுவதற்குச் சீனா தற்போது பல்வேறு முயற்சிகளை முன்னெடுக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகளை சீனாவிற்கு வழங்கப்படப் போவதாகச் சொல்லப்படுகிறது. இந்த விடயங்களை வெறுமனே ஒதுக்கிவிட முடியாது. அவ்வாறு வழங்க முடியாதென்பதை அறிவிக்கவேண்டும்.

மேலும் வடக்கில் சீனா காலூன்ற ஒருபோதும் சம்மதம் இல்லை. அவ்வாறான முயற்சிகளை நாங்கள் எதிர்ப்போம். அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் – என்றார்.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வந்தால் முழு நாடும் திறந்தவெளிச் சிறையாகும்

### மு.கா. தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு



புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் முழு நாட்டையும் திறந்த வெளிச் சிறச்சாலையாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் சனிக்கிழமை நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார். அவர் மேலும் தெரிவித் ததாவது:

சமகால அரசியலில் பேசுபொருளாகியுள்ள முக்கிய விடயம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமாகும். இது உள்ளவாறே முழுமையாக அமுலாகும்பட்சத்தில் முழு நாடும் திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாறும் என்பது என்னுடைய நிலைப்பாடாகும். அவ்வாறு நான் கூறுவதற்கு காரணங்கள் உள்ளன.

நாம், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினையே முழுமையாக நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம். உள்நாட்டு முற்போக்க சக்திகளும், முழு சர்வதேச சமுகமும் இந்தச் சட்டத்தினை நீக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

அவ்வாறு இருக்கையில், புதிதாக கொண்டு வந்திருக்கின்ற சட்டமூலம் இருந்ததை விடவும் மிகவும் மோசமாக இருக்கின்றது. குறித்த சட்ட மூலத்தினை அமுலாக்கி ஆட்சியா ளர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு முனைகின்றார்கள். அதாவது, அனைத்துவிதமான அரச எதிர்ப்பு போராட்டங்களையும் பயங்கரவாதம் என்ற போர்வையில் முடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

## ஊடகங்களைப் பாதிக்கும் சரத்துக்களை திருத்தும் இயலுமை மொட்டுவுக்கு உண்டு

### இப்படிச் சொல்கிறார் சஞ்சீவ எதிரிமானே



புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் ஊடகவியலாளர்களைப் பாதிக்கும் விடயங்கள் காணப்பட்டால் அவற்றை மாற்றியமைக்கும் இயலுமை தமக்குள்ளதாக பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமானே தெரிவித்தார்.

களுத்துறையில் நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஊடகவியலாளர்கள் தொடர்பாகவும் பேசப்படுகின்றது. குறித்த சட்டமூலத்தில் காணப்படும் ஏற்பாடுகளில் ஊடவியலாளர்களை இலக்கு வைக்கும் விடயங்கள் உள்ளதாயின் அவற்றை மாற்றியமைப்பதற்கான இயலுமை எமக்குள்ளது.

அதேநேரம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை பொது மக்கள் மீதான அடக்குமுறைக்குப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கமாட்டோம்.

ஊடக சுதந்திரமானது, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் சுதந்திரமாகும். அந்த சுதந்திரத்திற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினால் பாதிப்பு ஏற்பட அனுமதிக்க முடியாது. ஆகவே அந்த விடயத்தில் நாம் உறுதியாக இருப்போம் என்பதைப் பொறுப்புடன் உறுதியாகக் கூறுகின்றோம் – என்றார்.

### ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாக்க

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரச எம்பிக்களும் எதிர்க்கவேண்டும்

### கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு அழைப்பு



ஜனநயகத்தை மதித்து பேணிப் பாதுகாப்பதற்காக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தைத் தோற்கடிக்க ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்வரவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சியில் சனிக்கிழமை பிரஜைகள் குழு சார்பில் செய்தியாளர்களைச் சந்தித்த அதன் செயலாளர் சிங்கராசா ஜீவநாயகம் இந்த அழைப்பை விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலே கொண்டுவரப்பட விருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக நாடாளுமன்றத்திலே சில நாட்களில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கையில் நீதி அமைச்சு ஈடுபட்டுள்ளது. இந்த சட்டம் தொடர்பாக பல்வேறுபட்ட 2

## கடலில் கப்பல் கழிவு கலந்திட்டால் அளவிட சரியான கருவிகள் இல்லை

### சுற்றாடல்துறை அமைச்சர் தெரிவிப்பு

கப்பல்களில் இருந்து கழிவுகள் கடலில் கலந்ததா என்பதைக் கண்டறிவதற்கான வினைத்திறனான கண்காணிப்பு கருவிகள் எம்மிடத்தில் இல்லை என்று சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

திருகோணமலைக் கடற்பரப்பில் ஒரு வகை எண்ணெய்போன்ற படிமங்கள் தொடர்ச்சியாக ஒதுங்கி வருகின்ற நிலையில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு 2

## மின்னல் தாக்கியதில் 12 வயது சிறுவன் பலி

### இருவர் வைத்தியசாலையில்

மின்னல் தாக்கியதில் 12 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ருவன்வெல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மேலும் இரு 2

## கடன் மறுசீரமைப்புத் தொடர்பிலான பேச்சு முன்னேற்றம் அளித்துள்ளது

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

முக்கியமான வாரம் நிறைவுக்கு வந்துவிட்ட நிலையில், கடன்மறுசீரமைப்புப் பேச்சுக்கள் முன்னேற்றம் அளித்துள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கிக் குழுவின் வசந்த காலக் கூட்டங்கள் நிறைவுக்கு வந்துள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக் குழு ஆகியவற்றுடன் முக்கிய கூட்டங்களில் நாம் பங்கேற்றிருந்தோம்.

இதன்போது, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான முன்னுரிமைகள் மற்றும் பொருளாதார நிலைபேண்தகு நிலைமையை நோக்கி செல்வதற்காக நாம் அடைந்துள்ள முன்னேற்றம் உள்ளிட்ட விடயங்கள் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அன்னை பூபதியின் நினைவு தினத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள்

## ஏற்பாட்டு குழு அறிவிப்பு

இந்தியப்படைகளால்தமிழர்தாயகத்தில் வலிந்து திணிக்கப்பட்ட அடாவடிகளை நிறுத்த வலியுறுத்தி மட்டக்களப்பு மண்ணில்உயிர்நீத்ததியாகதீபம்அன்னை பூபதியின் 35 ஆவது நினைவு தினத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அன்னை பூபதியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

அன்னை பூபதியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஊடக சந்திப்பு நேற்று மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்றது. இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

இந்த நிகழ்வு கடந்த காலங்களில் ஒழுங்கில்லாமல் ஒவ்வொருவருடைய வசதிகளுக்கும் நேரத்துக்கும் ஏற்ப தீபத்தின் தீபச்சுடர் ஏற்றப்பட்டு வழிபாடுகள் செய்யப்பட்டது. அவ்வாறு இல்லாமல் நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற பெரியோர்களை கொண்டு ஒரு கட்டமைப்பை உருவாக்கி இருக்கின்றோம்.

தியாகதீபம்அன்னைபூபதிநினைவேந்தல் அழைப்பு நாளானது மேற்படி தியாகதீபம் அன்னை பூபதியின் 35 ஆவது நினைவேந்தல் எதிர்வரும் 19.04.2023 அன்று நாவலடியில் அமைந்துள்ள அன்னையின் சமாதியில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் அமைப்பில் உள்ளவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னை பூபதியின் 35 ஆவது நினைவேந்தல் நிகழ்வினை இம்முறை விசேடமாக நாங்கள் கொண்டாடுகின்றோம். அமைப்புகளை உருவாக்கி அதன் காரணமாக மதம் பேதம் பாராமல் அனைவரும் அம்மாவுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும்.

சிவில் சமுக செயற்பாட்டாளர் சபா. சிவயோகநாதன் கருத்துத் தெரிவிக்கையில் –

1988 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19 ஆம் திகதி அந்த நேரத்தில் இருந்த இந்திய ஆக்கிரமிப்பு படை வெளியேற்றப்பட வேண்டும். யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்.

இது போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து தியாக தீபம் அன்னை பூபதி அவர்கள் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் உண்ணாவிரதம் இருந்து 30 நாள்களின் பின்னர் சித்திரை மாதம் 19 ஆம் திகதி தனது உயிரை நீத்தார்.

தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடங்களும் நினைவேந்தல்கள் நடந்தாலும் அவை முறையே செய்வதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கி இந்த முறை சிறப்பாக அந்த நிகழ்வுகள் யாவும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நினைவுதினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட இருக்கின்றன.

அதனுடைய பரிசளிப்பு நிகழ்வுகள் அன்னை பூபதியின் நினைவேந்தலின் நிகழ்வுகள் இடம் பெற்றதன் பின்னர் நடைபெறும். அன்னைபூபதியின் அடையாளமாக உண்ணாவிரதம் ஒன்று காலை 6.00 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை மாமாகேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளனர்.

### கடன் மறுசீரமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கான ஒத்து ழைப்புக்கான வாய்ப்புகள் கிட்டியிருந்ததோடு சதகமான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுவதற்கான உறுதிப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறிப்பாக, பாரிஸ் கிளப் செயலகத்தின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸைச் சந்தித்ததில் மகிழ்ச்சியடைவதோடு அவருடன் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் இந்த செயற்பாட்டில் பாரிஸ் கிளப் வகித்த முக்கிய பங்கு குறித்து தெளிவாக விவாதித்தோம் – என்றார்.

### மின்னல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ருவன்வெல்ல-மாப்பிட்டிகமபிரதேசத்தில் களனி ஆற்றில் குளித்துவிட்டு வீட்டிற்கு நடந்து சென்ற குழுவினர் நேற்று மாலை இந்த அனர்த்தத்தைச் சந்தித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்னல் தாக்கி உயிரிழந்த சிறுவன் ருவன்வெல்ல – கோனகல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், காயமடைந்தவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (02)

### கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை கடற்பரப்பில் ஒதுங்கி வருகின்ற எண்ணெய்போன்ற படிமங்கள் தொடர்பிலான ஆய்வுகளை நரா நிறுவனம் முன்னெடுத்துள்ளது. தென்கொரியக் கப்பலொன்று பயணத்துள்ள நிலையில் அதிலிருந்து கழிவுகள் வெளியேற்றப்பட்டனவா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. எனினும் அது உடனடியாக உறுதியாகவில்லை.

அதேநேரம், சர்வதேச கடற்பரப்பின் ஊடாக பயனிக்கின்ற கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமான முறையில் கழிவுகளை அகற்றிவிட்டுள்ளதா என்ற சந்தேகங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறானநிலையில்தற்போது ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விதமான செயற்பாடுகளை கண்டறிவதற்கான நவீன வினைத்திறனான கண்காணிப்புக் கருவிகள் எம்மிடத்தில் இல்லை. ஆகவே அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

பிரான்ஸிடமிருந்து நன்கொடையின் அடிப்படையில் அக்கருவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள –என்றார்.

### சீர்திருத்தங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவதது:

இலங்கையினால் ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்தங்கள், மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறான மாற்றங்களுக்கான ஒத்துழைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பின் முன்னேற்றம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான சமூகப் பாதுகாப்பு சீர்திருத்தம் உட்பட, பொருளாதார சீர்திருத்தங்கள் வெற்றிபெறுவதற்கு வெளிப்படைத்தன்மை முக்கியமானது.

மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை ஆதரிப்பது குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. நிதி, நிதி மற்றும் பொருளாதார நிர்வாக சீர்திருத்தங்களில் இலங்கையின் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையின் பொருளாதாரத்தை முழுமையாக மீட்டெடுப்பதற்கு முயற்சிகள் தொடர வேண்டும். அத்துடன், சர்வதேச தர்ப்பினரின் யோசனைகள் மற்றும் நிதியுதவியுடன் உலக வங்கி குழுவின் ஆதரவும் ஒத்துழைப்பும் தொடரும் என்றார்.

## திருகோணமலை கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



திருகோணமலை – அலஸ்தோட்டம் கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆண் வெள்ளிக்கிழமை வீட்டிலிருந்து மாலை சென்றுள்ளார் எனவும் அவர் நேற்று (சனிக்கிழமை) சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாம்பல்தீவு – சல்லி வாட்டுபகுதியை சேர்ந்த 38 வயதுடைய ராஜலிங்கம் பிரபாகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடற்கரையில் மீக்கப்பட்ட சடலத்தை நீதிவான் பார்வையிட்டதையடுத்து பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு கட்டளைவிடுத்துள்ளார்.

அத்துடன் சடலம் பிரேத பரிசோதனைகள் முடிவுற்ற பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பவுள்ளது.

மரணம் தொடர்பிலான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புகள் இருக்கின்றது. அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் இருக்கின்றது. அதேவேளை, குறித்த நட்டத்தை கட்டாயமாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதில் அரசாங்கமும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றமையை நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

பாராளுமன்றத்தில் பெரும்பாண்மை பெறுவதுதான் இந்த சட்டத்தை தீர்மானக்கும் சக்தியாக இருக்கும். எனவே, சிறுபாண்மையின பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு அப்பால் சென்று, ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிக்கு வெளியில் சென்று இந்த கொடூரமானதும், அபாயகரமானதுமான எதிராக வாக்களிக்க வேண்டும் என்பது பொதுவாக பிரஜைகளுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது,

ஏனெனில் குறித்த சட்டம் பாரதூரமான சரத்துக்களை கொண்டிருக்கின்றது. அதன் ஊடாக அரச பயங்கரவாதம் தலை தூக்குவதற்கான சூழல்கள் இருக்கின்றது. ஜனநாயகம், மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் மறுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய காணப்படுகின்றது,

ஒரு சமூகம் சார்ந்தும், இனக்குழுமம் சார்ந்தும் சிந்திக்காது, ஒட்டுமொத்த நாட்டின் பிரையைகளின் உரிமைகள், நலன்கள் எனும் விதமாக உற்றுநோக்கி, இந்த சட்டத்தை தோற்கடிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுடைய பங்கும், அர்ப்பணிப்பும் தேவை.

எந்தமொழி, கட்சி, இனமாக இருந்தாலும் ஒட்டுமொத்த இலங்கையினுடைய ஜனநாயகத்திற்கு ஆப்பு வைக்கின்றதும், ஜனநாயக கொள்கையை அடிப்படையில் கிள்ளியெடுக்கும் சட்டமாக பயங்கரவாத சட்டம் இருக்கின்றமையால், அதனை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்க வேண்டும்.

குறிப்பாக இவ்வாறானதொரு சர்ச்சைக்குரிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்காக எடுக்கின்றபொழுது, பல உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு சமூகமளிப்பதில்லை. இது தோல்வியுற்ற அரசியல் நாடாகவும், தோல்வியுற்ற கலாச்சாரத்தை கொண்ட நாடாகவும் இருக்கின்றதா என்ற ஐயப்பாடு நிலவுகின்றது.

ஏனெனில் திராணியற்ற பாராளுமன்ற உறுப்பினர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். தாங்கள் இந்த சட்டத்திற்கு எதிராக வாக்களித்தால் அரசாங்கத்தினுடைய வரப்பிரசாதங்களை அல்லது திரைமறைவில் நடக்கும் கொடுக்கல் வாங்கல்களை பெறமுடியாத நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்படுவார்கள் என்ற சந்தேகக்கண்ணோடு தங்களை வெளிப்படுத்துவதில் மதில்மேல் பூனை போன்று இருந்துவிட்டு பாராளுமன்றத்திற்கு சமூகமளிக்காது இருக்கின்றார்கள்.

ஆதரித்து வாக்களிப்பதும், பாராளுமன்றத்திற்கு சமூகமளிக்காது இருப்பதும் அச்சட்டத்திற்கு ஆதரவளிப்பதாகவே பொது மக்கள் நாங்கள் கருதுகின்றோம். எனவே, பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பது எமது நாட்டு மக்களிற்கு தேவையற்ற ஒன்று.

நாட்டு மக்கள் அவ்வாறான ஒரு சட்டத்தை தற்பொழுது எதிர்பார்க்கவில்லை. இப்போதைய அரசாங்கம் பல்வேறுபட்ட பிரச்சினைகளை, பல்வேறுபட்ட விதங்களிலே தூண்டித் தூண்டி விடுகின்றார்கள். மக்களின் புலன்களை பல்வேறுவிதமாக திசை மாற்றப்பார்க்கின்றார்கள்.

உதாரணமாக சீனாவிற்கு காணி கொடுக்கின்ற விடயத்தை பார்க்கலாம். இவ்வாறானவற்றை பார்க்கின்றபோது, அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரச்சினைகளையும் கையாள்வதற்கான யுக்தியாக, பொறிமுறையாக பார்க்கின்றோம்.

இந்தச் சட்டம் தொடக்கத்திலேயே தோற்கடிக்கப்படவேண்டும். இந்தச் சட்டம் வென்றால் அல்லது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் சட்டவாக்கச் செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டால், சர்வதேச ரீதியாக அது இலங்கைக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

இந்த சட்டம் அங்கிகரிக்கப்படுமானால், ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திற்கும் பெரும் பின்னடைவு ஏற்படும். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகையை இழக்கவேண்டி வரலாம்.

எனவே, இலங்கையில் உள்ள அனைவரும் இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்க்கவேண்டும். அரசியல் கட்சிகள், அதன் தலைவர்கள் என்ற ரீதியில் ஒட்டுமொத்தமாக இதற்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

நாடாளுமன்றத்தில் உள்ள ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இச்சட்டத்தை தோற்கடிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக, மனித உரிமைகளை மதிக்கின்ற பேணிப் பாதுகாக்கின்றவர்களாக அவர்கள் இருந்தால் இந்தச் சட்டமூலத்தை எதிர்க்கவேண்டும் – என்றார்.

## சித்திரை புத்தாண்டு காலத்தில் மதுபான விற்பனை அதிகரிப்பு

புத்தாண்டு காலத்தில் மதுபான விற்பனை அதிகரித்துள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தாண்டு காலத்திற்கு முன்பு, மது விற்பனை சுமார் 40 வீதம் குறைந்துள்ள நிலையில் புத்தாண்டு காலத்தில் மீண்டும் 20 வீதம் அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் புத்தாண்டு வாரத்தில் இந்த விற்பனை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

வற்வரியை 2000 ரூபாவால் குறைக்குமாறு மதுபான நிறுவனங்கள் நிதியமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்த போதிலும் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மதுபானங்களின் விலையை குறைக்குமாறு நிறுவனங்கள் இந்த கோரிக்கையை முன்வைத்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இசை நிகழ்வில் கத்திக்குத்து 6 பேர் வைத்தியசாலையில்

கதிர்காமத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின் போது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற மோதலில் ஈடுபட்ட 6 இளைஞர்கள் கத்தியால் குத்தப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு விழா ஒன்றின் இறுதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

ஒரு தரப்பைச் சேர்ந்த நால்வரும், மற்றைய தரப்பினரை சேர்ந்த இருவர் காயமடைந்து கதிர்காமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## எம்பிலிப்பிட்டியவில் பயங்கர விபத்து 15 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு



எம்பிலிப்பிட்டிய ஹிங்ரஹார கல்வங்குவ பிரதேசத்தில் கெப்ரக வாகனம் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த வாகன விபத்தில் 15 பேர் படுகாயமடைந்து எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று (சனிக்கிழமை) மாலை 4.30 மணியளவில் கெப் ரக வாகனம் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதை தொடர்ந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் மோதி ஏற்பட்டுள்ளது.

விபத்தில் 6 குழந்தைகள், 4 ஆண்கள் மற்றும் 5 பெண்கள் படுகாயம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிபிட்டிய தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நுவரெலியாவில் மினி சூறாவளி

### 14 வீடுகள் சேதம்



நுவரெலியா – லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரகந்த ஸ்பெசிபன் தோட்டத்தில் ஏற்பட்ட மினிசூறாவளி காரணமாக 14 வீடுகள் சேதமடைந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) பதிவாகியுள்ளது.

சேதமடைந்த குடியிருப்பின் கூரை தகரங்கள் காற்றினால் அல்லூண்டு எறியப்பட்டதன் காரணமாக இருவருக்கு சிறிய அளவில் காயங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய குறித்த பகுதிக்கு இரண்டு மணித்தியாலங்கள் மின் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அக்கரகந்த ஸ்பெசிபன் தோட்டத்தில் ஏற்பட்ட மினிசூறாவளி காரணமாக 74 பேர் தோட்டத்தில் உள்ள சிறுவர் பாராமறிப்பு நிலையத்திலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களுக்கு தேவையான சமைத்த உணவுகளை வழங்குவதற்கு தோட்ட நிர்வாகம் மற்றும் கிராம சேவகர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மினிசூறாவளி மழையில்லாத போது திடீரென ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் தொடர்பாக லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குருமண்வெளி – மண்டூர் படகுப் பாதையில் நிதி அறவீடு செய்வதற்கு மக்கள் எதிர்ப்பு








மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங் கரை மற்றும் எழுவாங்கரைப் பகுதியை ஊடறுத்துச் செல்வதே இலங்கையின் மிக இரண்டாவது நீளமான வாவியாகக் கருதப்படும் மட்டக்களப்பு வாவியாகும்.

இவ்வாவியைக் கடந்தே இருபகுதிக்குமான போக்குவரத்து மார்க்கங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதில் பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாகக் கருதப்படுவது குருமண்வெளி - மண்டூர் படகுப்பாதைப் போக்குவரத்தாகும்.

இதுவரைகாலமும்எதுவித கொடுப் பனவுகளையும் செலுத்தாமலேயே அப்பாதையினூடாக பிரயாணிகள் தமது போக்குவரத்துக்களை மேற்கொண்டு வந்துள்ளனர்.

எனினும் கடந்த 01.04. 2023 அன்றிலிருந்து இப் படகுப்பாதையில் போக்குவரத்துச் செய்யும் பயணிகளிடம் கட்டணம் அறவிடப்படும் என கட்டண விவரங்கள் அடங்கிய பாதாகை ஒன்று வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதம பொறியியலாள ரால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததையடுத்து, கடந்த முதலாம் திகதி நிதி வசூலிப்பது நிறுத்தப்பட்டிருந்தது.

இது இவ்வாறு இருக்க நேற்று (சனிக்கிழமை) அப்படகுப் பாதையில் பயணம் செய்யும் பயணிகளிடம் நிதி அறவீடு செய்யப்படுவதாக குறித்த பதாகை யில் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு, நிதி வசூலிப்பதற்குரிய பற்றுச் சீட்டுக்களுடன் பொறியியலாளர்கள் மற்றும் நிதி அறவீடு செய்யும் உத்தியோகத்தர்களும் திடீரென வருகை தந்து படகுப்பாதையில் நிதி அறவீடு செய்த பின்னர் பாதையில் பயணம் செய்வதற்கு அனுமதித்தனர். இதற்கு அப்பகுதி மக்கள் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனால் குறித்த போக்குவரத்து மார்க்கத்தில் ஈடுபடும் 2 படகுகளும், முற்பகல் 11.30 மணிவரையில் சேவையிலீடுபடவில்லை.

தாம் இதுவரையில் எதுவித கட்டணங்களும் செலுத்தாமலேயே தமது போக்கு-வரத்துக்களை இதில் மேற்கொண்டு வந்ததாகவும், இன்றிலிருந்து நிதி அறவீடு செய்யும் நடைமுறையை வீதி அபிவிருத்தி திணைக்களம் கைவிட வேண்டும் எனவும், இதற்கு தாம் எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும் பயணிகளும், பொதுமக்களும் கருத்துத் தெரிவித்தனர்.

எனினும் தமக்கு மேலிடத்திலிருந்து வந்த உத்தரவின் பெயரிலேயே நிதி அறவீடு செய்வதாக அவ்விடத்திலிருந்த வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியி-யலாளர் ஒருவரும், நிதி வசூலிப்பில் ஈடுபட்ட உத்தியோகஸ்த்தர்களும், தெரிவித்தனர்.

பின்னர் அவ்விடத்துக்குவந்தகளுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரயாணிகளுடனும், பொதுமக்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

பொதுமக்களுக்கு அமைதியான முறையில் தமது உரிமைகளைக் கேட்பதற்கு உரிமையுள்ளது. ஆனால் போக்குவரத்தில் ஈடுபடுபவர்களைத் தடுப்பதற்கு யாருக்கும் அனுமதியில்லை, நிதி அறவீடு செய்வதை தடை செய்ய வேண்டுமாக இருந்தால் உரிய அதிகாரிகளுக்கு மக்கள் எழுத்து மூலமாக விண்ணப்பங்களை வழங்க முடியும்.

எனவே மக்கள் குறித்த பாதையில் போக்குவரத்துச் செய்வதக்கு யாரும் தடை ஏற்படுத்த முடியாது என தெரிவித்து பாதைய சேவையிலீடுபடுத்துமாறு தெரிவித்தமைக்கிணங்க, மக்களின் எதிர்பதையும் மீறி பற்றுச் சீட்டு வழங்கி நிதி வசூலித்த பின்னர் மக்கள் குறித்த பாதையில் போக்குவரத்து தொடர்ந்து இடம்பெற்றது. பயணிகள்(12 வயதிற்கு மேற்பட்டவர்கள்) 10 ரூபா, சைக்கிள் ஒருவருடன் 30 ரூபா, மோட்டார் ஓட்டுநருடன் 50 ரூபா, ஓட்டோ ஓட்டுநருடன் 100 ரூபா, கார், வான், பிக்கப் ஓட்டுநருடன் 250 ரூபாவும் அறவீடு செய்யப்படுவதுடன், சீருடையுடன் வரும் பாடசாலை மாணவர்களுக்கும், அரச வாகனங்களுக்கும் இலவசமாகவும் பணயம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருமண்வெளி – மண்டூர் ஓடத்துறைக்கு நிரந்த் பாலம் அமைப்பதற்காக வேண்டி கடந்த காலங்களில் பலதடவைகள் அடிக்கல் நடப்பட்ட நிலையிலும் அது இதுவரையில் கைகூடாத நிலையிலேயே இருருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதிலும் நிலங்களை சுவீகரிப்பதிலுமே அரசு குறியாக இருக்கிறது

### சிறிதரன் எம்.பி. காட்டம்




கிளிநொச்சி இரணைமடு குளத்தின் தெற்கு பகுதியில் யுத்தத்துக்கு பின்னரான 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நில ஆக்கிரமிப்புகள் நடைபெற்று வருகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி அலுவலகமான அறிவகத்தில் நேற்று (சனிக்கிழமை) மாவட்டத்தின் கட்சி அமைப்பாளர்கள், வேட்பாளர்கள், பிரதிநிதிகள் பொது மக்களுடனான சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதிலும், நிலங்களைச் சுவீகரிப்பதிலுமே இந்த அரசாங்கம் குறியாக இருந்து வருகின்றது.

குறிப்பாக, பூநகரி பிரதேசத்தில் அட்டைபண்ணைகள், இறால் பண்ணைகள் என்கிற பெயரில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. – என்றார்.

இதன்போது, கிளிநொச்சியின் மண்டலாய், புல்லாவெளி ஆகிய பகுதிகளிலும், இரணைமடுக் குளத்தின் தெற்கு பகுதியிலும் சீன அரசாங்கத்துக்கு காணிகளை வழங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன என வெளி யான செய்தி தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்ட போது அவர் பதிலளிக்கையில் –

2009 ஆம் ஆண்டுயுத்தத்துக்கு பின்னர் இரணைமடுவின் தெற்கு பகுதியை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருப்பதுடன், காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அந்த பகுதியில் இருக்கின்ற காணிகளை ஆக்கிரமித்து, சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்படுகின்றன. அல்லது மறைமுகமாக காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

குறித்த பிரதேசங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் சென்று உண்மைகளை அறிவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த முடியுமா என வினா தொடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வட மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், பூநகரி பிரதேச சபை தவிசாளர் சிறிறஞ்சன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எட்டு மாத கர்ப்பிணி மீது வாள்வெட்டுத் தாக்குதல்

### நகைகள் மற்றும் பணம் என்பன கொள்ளை

வவுனியா, பம்பைமடு பகுதியில் வீதியில் சென்ற தாய் மற்றும் மகள் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது அவர்கள் அணிந்திருந்த நகைகள் மற்றும் பணம் என்பனவும் கொள்ளையிடப்பட்டுள்ளன என பூவரசன்குளம் பொலி-ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, பூவரசன் குளம் பகுதியில் வசிக்கும் தாயும், எட்டு மாத கர்ப்பிணியான அவரது மகளும் புத்தாண்டு தினத்தன்று மோட்டார் சைக்கிளில் வவுனியா நகரில் இருந்து பூவரசன்குளம் நோக்கி சென்றுள்ளனர்.

இரவு 8.30 மணியளவில் பம்பைமடு பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக் கழகத்துக்கும், பம்பைமடு இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட சிறிய பற்றைக் காட்டுக்குள் இருந்து முகத்தை துண்டுகளால் மூடி கட்டியவாறு வந்த மூவர் குறித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து அவர்கள் மீது வாளால் வெட்டி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன், அவர்கள் அணிந்திருந்த சங்கிலி, காப்பு, மோதிரம் உள்ளிட்ட 6 அரைப் பவுண் நகைகளை கொள்ளையடித்துள்ளதுடன், அவர்களது பையில் இருந்த ஒன்றரை லட்சம் ரூபா பணம் மற்றும் தொலைபேசிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த பூவரசன்குளம் பகுதியைச் சேர்ந்த தாய் மற்றும் 8 மாத கர்ப்பிணி பெண் ஆகிய இருவரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# நாடுகளுக்கு அரசு காணி வழங்குவதில்லை சரியான முதலீட்டாளர்களுக்கே வழங்கும்

### குதர்க்கம் பேசுகிறார் வடக்கு ஆளுநர்



அரசாங்கம் நாடுகளுக்கு காணி வழங்குவதில்லை சரியான முதலீட்டாளர்களை அடையாளங்கண்டு அவர்களின் திட்டங்களுக்கே தேவையான காணியை வழங்குவதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார். வட மாகாண ஆளுநர் செயலகம், யாழ். மாவட்ட செயலகம் 51 ஆவது காலால் படை ஆகியன இணைந்து யாழ். துரைப்பா விளையாட்டு அரங்கில் நேற்று (சனிக்கிழமை) ஏற்பாடு செய்திருந்த புது வருட விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நிலையில் ஊடகவியளாளர் எழுபிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஆளுநரிடம் கேள்வி எழுப்பும் போது நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வடக்கில் சீனாவுக்கு 700 ஏக்கர் நிலம் வழங்கப்பட உள்ளதாகக் கருத்து தெரிவித்திருக்கிறார். அது பற்றி உங்களுக்கு ஏதேனும் தெரியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதில் அளித்த ஆளுநர், சிறிதரன் கருத்தை நான் அறியாத நிலையில் அவருடைய கருத்துத் தொடர்பில் பதில் கூற முடியாது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாட்டை பொருளாதார நிதியில் முன்னேற்றுவதற்கான தேவைப்பாடுகள் இருக்கும் நிலையில் முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து பல முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பும் நிலையில் அவர்களின் சரியான திட்டங்களுக்கு அரசாங்கம் வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கிறது. வடக்கில் முதலீடு செய்வதற்காக தற்போதைய சூழ்நிலையில் யாரும் விண்ணப்பித்துள்ளார்களா என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது.

அவ்வாறு விண்ணப்பித்திருந்தால் அவர்களுக்குத் தேவையான காணிகளை அடையாளங்கண்டு கொடுப்பதற்கு மாவட்ட செயலகம் மற்றும் மாகாண காணித் திணைக்களம் அதற்கான பணிகளைச் செய்வார்கள்.

ஆகவே அரசாங்கம் காணி வழங்குவதாயின் நாடுகளுக்கு காணிகளை வழங்குவதில்லை நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களுக்கே காணிகளை வழங்குவதாக"ஆளுநர் தெரிவித்தார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தமிழருக்கு மட்டும் தனி நீதி

நீதி அனைவருக்கும் சமம் என்று சொல்லப்படுகின்றது. அதனால்தான்நீதிதேவதையின்கண்கள்கட்டப்பட்டிருக்கின்றன. அவர் நீதிமன்றப் படியேறி வரும் யாரையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் – பரம ஏழை முதல் அதிகாரம் படைத்த பணக்காரன் வரை – எல்லோரையும் சமமாகப் பார்ப்பாள் நீதி தேவதை என்பதே அதன் பொருள். கண்கள் கட்டப்பட்டிருப்பதாலோ என்னவோ நீதி தேவதை தன் காதுகளையே எப்போதும் நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. அதாவது அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்டுத்தான் நீதியை வழங்க வேண்டியிருக்கிறது.

அப்படி நீதி தேவதைக்குச் சொல்பவர்கள் அதிகாரமும் செல்வாக்கும் பொருந்தியவர்களாக இருக்கும்போது, நீதி எல்லோருக்கும்சமனானதுதானா என்கிற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அண்மையில் யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டத்தின் முன்பாக வைக்கப்பட்ட அம்மன் சிலை ஒன்றை அகற்றுவதற்குப் பொலிஸார் காட்டும் அக்கறையைப் பார்க்கும்போது இந்தக் கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

யாழ்ப்பாணப் பெரு நிலப் பரப்பில் இருந்து அதனைச் சுற்றியுள்ள சிறு தீவுகளுக்குச் செல்லும் தொடக்கப் புள்ளி பண்ணைச் சுற்றுவட்டம். இந்தப் புள்ளியில் இருந்து கடலூடாகப் போடப்பட்டுள்ள தாம்போதியைக் கடந்து சிறு தீவுகளுக்குச் செல்ல முடியும். குறிப்பாக ஆன்மிகச் சுற்றுலாவிகளின் புகழ்பெற்ற தலமான நயினாதீவுக்குச் செல்வதற்கான நுழைவாயில் இந்த இடம். நயினா தீவில் நாகபூசனி அம்மன் தேவாலயம் மட்டுமல்ல நாகதீபம் எனப்படும் விகாரையும் இருக்கின்றது.

இந்த இரு இடங்களுக்கும் செல்லவேண்டுமானால் பண்ணையைத் தாண்டித்தான் செல்ல முடியும். அந்த இடத்தில்தான் அம்மன் சிலை சித்திரைப் புதுவருடப் பிறப்புக்கு முதல்நாள் திடீரென முளைத்தது. அதன் இடதுபுறத்தில் யாழ்ப்பாணம் காவல்துறை நிலையம் அமைந்திருக்கிறது. வலது புறத்தில் மிக அருகாகக் காவல்துறை அதிரடிப் படை முகாம் அமைந்திருக்கிறது. அப்படியிருந்தும் அந்தத இடத்தில் இரவோடு இரவாகச் சிலையை வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். இப்போது அந்தச் சிலையை அகற்றுவதற்கு காவல்துறையினர் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். அதற்காக நீததிமன்றத்தின் ஊதவியையும் நாடியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்கனவே ஓரிடத்தில் அனுமதியின்றி விகாரை அமைக்கப்படுகின்றது. அதுகுறித்து முறையிட்டும் காவல்துறையினர் அதனைத் தடுத்து நிறுத்தவில்லை. திருக்கேதீச்சரத்திலலும் அப்படியே! அனுமதியின்றி அமைக்கப்படும் விகாரைகக் கட்டுமானத்தைக் காவல்துறையினரால் நிறுத்த முடியவில்லை. நாவற்குழியில் அனுமதியின் அமைக்கப்பட்ட விகாரையை அகற்றுவதற்கு நீதிமன்றத்தின் உதவியை காவல்துறையினர் ஒருபோதும் நாடியதில்லை. குருந்தூர் மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரை கட்டி முடிக்கப்பட்டமை குறித்து காவல்துறையினர் தாமாக முன்வந்து எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை. ஆனால், பண்ணைச் சுற்றுவட்டத்தில் அம்மன் சிலையை வைத்தபோது மட்டும் அதனை அகற்றுவதில் காவல்துறையினர் தீவிரம் காட்டுகின்றனர்.

அதற்கு அவர்கள் கூறும் காரணம் இரண்டு. ஒன்று போக்கு–வரத்துக்கு இடைஞ்சல். இரண்டாவது இன நல்லுறவுக்குப் பங்கம். உண்மையில் சிலை போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இல்லை. அதேபோன்று அந்தச் சிலை அங்கே இருப்பதால் யாருக்கு என்ன மதக் கவலை வந்து யார் முறையிட்டார்கள் என்றும் தெரியவில்லை.

அனுமதி பெறாமல் அந்த இடத்தில் சிலை வைத்தது தவறுதான். அதை யாரும் மறுக்கமுடியாது. அதேயளவிற்கு, புத்தர் சிலைகள் இப்படி அத்துமீறி வைக்கப்படும்போது எதுவும் பேசாமல் இருக்கும் காவல்துறையினர் இந்துச் சிலை வைக்கப்பட்டதும் அதனை அகற்றுவதில் தீவிரம் காட்டுவதும் தவறுதான். நீதி எப்படி ஒவ்வொருவருக்கும் மாறுபட முடியும். அனுமதியற்ற எல்லாச் சிலைகளையும் எல்லா வழிபாட்டிடங்களையும் அகற்றவேண்டும். அதுதான் நீதியானதும் நியாயமானதுமான நடவடிக்கையாகும்.

ஆனால், இலங்கையில் காவல்துறையினரிடம் அதனையெல்லாம் எதிர்பார்க்க முடியாது என்பதால் இந்த நியாயங்களையும் நீதி தேவதையின் காதில் யாராவது உரத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. இல்லையேல் காவல்துறையினர் இதுபோன்று தறிகெட்டு அலைவதைத் தடுக்க முடியாது.

# இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஆட்சேபனை வெளியிடவேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை



இலங்கையின் உத்தேச பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் தனது எதிர்ப்பை வெளியிடவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை மக்களின் உரிமைகளை முக்கியமானவையாக பெறுமதிமிக்கவையாக பைடன் நிர்வாகம் கருதினால், ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நிர்வாகத்திற்கு பைடன் நிர்வாகம் தெளிவான செய்தியைத் தெரிவிக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மனித உரிமையின் அனைத்து அளவுகோல்களிலும் தோல்வியடைந்துள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசியாவிற்கான பரப்புரை இயக்குநர் கரொலின் நாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் உரிமைகள் மிக முக்கியமானவை என பைடன் நிர்வாகம் கருதினால் இந்தச் சட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்படவேண்டும் அல்லது முற்றாகக் கைவிடப்படவேண்டும் என்ற செய்தியை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு தெரி விக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நான்கு தசாப்தகாலமாக சிறுபான்மையினத்தவர்களையும்தன்னைவிமர்சிப்பவர்களையும் தடுத்துவைத்து சித்திரவதை செய்வதற்காக இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக பைடன் நிர்வாகமும் அமெரிக்க காங்கிரஸும் அமைதியாகவிருந்தால் அது மாற்று நிலைப்பாடுடையவர்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்கும் இலங்கை அரசாங்கத்தின்றனை மேலும் வலுப்படுத்தும் எனத் தெரிவித்துள்ள நாஸ், பலதசாப்தகாலங்களாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக குரல்கொடுத்துவந்துள்ள இலங்கையின் சிவில் சமூகத்தை அவமதிக்கும் செயலே உத்தேச சட்டம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அல்லது மோசமான சட்டத்தை மாற்றியமைக்கும் நோக்குடன் அதிகாரிகள் உத்தேச சட்டத்தை கொண்டுவரவில்லை. மாறாக, அரசாங்கத்தைவிமர்சிப்பவர்களை இலக்குவைத்து அவர்களை மௌனமாக்கும் நோக்கத்துடனேயே இந்த உத்தேசசட்டம் கொண்டுவரப்படுகின்றது எனவும் சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசியாவிற்கான பரப்புரை இயக்குநர் கரொலின் நாஸ் தெரிவித்துள்ளார்.

# அரசியலில் நுழைவதற்கு நிபந்தனைகளின்கீழ தயார்

## ஜனக ரத்நாயக்க அறிவிப்பு



நிபந்தனைகளின் கீழ் அரசியலில் பிரவேசிக்கத் தயார் என இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

'ஒவ்வொரு குடிமகனுக்கும் அதிகாரம், அரவணைப்பு, ஊக்கம் மற்றும் நம்பகத்தன்மை உள்ள ஒரு நல்ல திட்டத்தை முன்வைக்க தனக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டால், அதைச் செய்ய தாம் எப்போதும் தயாராக இருப்பதாக ரத்நாயக்க ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

சில குடும்பங் கள் மற்றும் பலம் வாய்ந்த அரசியல்வாதிகள் 75 ஆண்டுகளாக, நாட்டில் விளையாடி வருகின்றனர் என்று ரத்நாயக்க கூறியுள்ளார். இலங்கையில் ரூபாவின் வீழ்ச்சிக்குப் பின்னர், உள்நாட்டுக் கடனைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மின்சார கட்டண உயர்வை எதிர்த்ததற்காக ரத்நாயக்க அரசாங்கத்தின் விமர்சனத்துக்கு உள்ளானார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தொடர்ந்தும் ரத்நாயகவை விமர்சித்து வருகிறார். சுயாதீன ஆணைக்குழுவில் இருந்து அவரை நீக்குமாறு கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஜனக்க ரத்நாயக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் காலத்தில் நியமிக்கப் பட்டார். விஜேசேகரவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தரப்பிலிருந்து, நாடா ளுமன்றுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்.

இந்நிலையில் தாம் ஒருபோதும் அமைச் சருடன் தனிப் பட்ட பிரச்சினைகளை கொண்டிருக்கவில்லை. எனினும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, ஒரு சுயாதீன ஆணையம் என்ற அடிப்படை யில் தாம், தமது பணிகளை செய்வதாக ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

# திருமலையில் நள்ளிரவில் பதற்றம் 17 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெலுங்கு கிராமத்தில் இருகுழுக்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் 17 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்தச்சம்பவம் நேற்றிரவு (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இம்மோதலில் காயமடைந்த 17 பேரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் தொடர்பாக தம்பலகாமம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மன்னார் உட்பட கிழக்கில் அதிகவெப்பம்

கிழக்கு, வடமத்திய மாகாணங்களிலும் குருநாகல், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகளவிலான வெப்ப நிலைகாணப்படும் எனவளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

முன்னதாக உள்ளடக்கப்பட்ட கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இதன் தாக்கம் சிறிதளவு குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, வெளியில் செல்பவர்கள் கவனமாக இருக்குமாறும், குழந்தைகளுக்கு இயன்றளவுதண்ணீரை குடிக்கக் கொடுக்குமாறும் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, நிலவும் காலநிலை காரணமாக பண்டாரவளை, கேகாலை மற்றும் பலாங்கொடை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நேற்றிரவு மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்டுள்ளது.

# மஹிந்தவின் புதுவருட கொண்டாட்டத்தில் பங்குபற்றாத மகன் யோஷித்த ராஜபக்ச

கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மூன்று மகன்மாரும் இணைந்தே எந்தவொரு பண்டிகையிலும் கலந்துக்கொள்வார்கள்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை மஹிந்த ராஜபக்ச குடும்பத்தினர் சித்திரை புத்தாண்டை கொண்டாடிய புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டன. அவற்றில் மஹிந்தவின் இரண்டாவது மகன் யோஷித்த ராஜபக்ச எந்தவொரு படத்திலும் இருக்கவில்லை.

மேலும் கோட்டாபயவின் ஆட்சி காலத்தில் பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக் வின் அலுவலகப் பிரதானியாக யோஷித்த ராஜபக்ச கடமையாற்றினார்.

இவ்வாறு முக்கிய பொறுப்புகளை வகித்தவர், கடந்த சில நாள்களாக யோஷித்த ராஜபக்ச எந்தவொரு இடத்திலும் காணப்படவில்லை.

எனவே, அவர் எங்கே இருக்கிறார் என்பது தொடர்பில் தற்போது மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

